## 3. சர்க்கரைத் துறை

தமிழ்நாட்டில் கரும்பு பயிர் வேளாண் தொழில் சார்ந்த பிரதான பயிர்களில் ஒன்றாக திகழ்கிறது. கரும்பு பயிர் சாகுபடி, அதிக மகசூல் மற்றும் உயர் வருமானம் ஈட்டி, விவசாயிகளுடைய வாழ்க்கைத் தரம் மேம்பாடு அடையும் வாய்ப்பினை தருகிறது. கரும்பில் உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை அதிகரிக்க பாசன நீர் சிக்கனம், முக்கிய இடுபொருட்களான இரசாயன உரங்கள் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் நுண்ணீர் பாசன மூலமாக இடுதல் முதலான அனைத்து தொழில் நுட்பங்களும் பரிந்துரைக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் சுமார் 3 இலட்சம் விவசாயிகள் 3.50 இலட்சம் எக்டர் பரப்பில் கரும்பு சாகுபடி செய்து வருகின்றனர். இந்திய அளவில் நமது மாநிலம் கரும்பு உற்பத்தி திறனில் இரண்டாவது இடத்தில் உள்ளது, இந்திய சர்க்கரை உற்பத்தியில் சுமார் 7 – 9 சதவீதம் நமது மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது. நமது மாநிலத்தில் நான்காவது மதிப்பீட்டின்படி 2013–14 சர்க்கரை பருவத்தில் 3.27 இலட்சம் எக்டரில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டு, எக்டருக்கு 97 மெ. டன் என்ற விகிதத்தில் 317.60 இலட்சம் டன்கள் கரும்பு உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு, பொதுத்துறை மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகள் நடப்பு கரும்பு பருவத்தில் 30.06.2014 முடிய 128.08 இலட்சம் மெ.டன் கரும்பு அரவை செய்துள்ளன. 2013–14 அரவை பருவத்தின் எஞ்சிய காலத்தில் 14.14 இலட்சம் மெ.டன் கரும்பு அரவை செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2014–2015 அரவை பருவத்தில் எதிர்பார்க்கப்படும் கரும்பு உற்பத்தி 200 இலட்சம் டன்களில் இருந்து 55–60% சர்க்கரை ஆலைகளால் அரவை செய்திட திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையில் 16 சர்க்கரை ஆலைகளும், பொதுத்துறையில் 3 சர்க்கரை ஆலைகளும், தனியார் துறையில் 27 சர்க்கரை ஆலைகளும் ஆக மொத்தம் 46 சர்க்கரை ஆலைகள் உள்ளன. இவற்றில் மதுரா சர்க்கரை ஆலை, (மதுரை



மாவட்டம்) பொதுத்துறை, அருணாச்சலம் சர்க்கரை ஆலை (திருவண்ணாமலை மாவட்டம்) மற்றும் எம்.ப்பி சர்க்கரை ஆலை (திருநெல்வேலி மாவட்டம்) ஆகிய சர்க்கரை ஆலைகள் இயங்காத நிலையில் உள்ளன. 43 சர்க்கரை ஆலைகள் மட்டும் தற்சமயம் இயங்கி வருகின்றன. மேலும் சர்க்கரை ஆலைகளின் பெயர், இடம், துவங்கப்பட்ட ஆண்டு மற்றும் தினசரி அரவைத்திறன் ஆகிய விவரங்கள் அட்டவணை– I தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் கடந்த 2 ஆண்டுகளில் கரும்புச் சாகுபடிப் பரப்பு, கரும்புப் பதிவு பரப்பு, கரும்பு அரவை, சர்க்கரை உற்பத்தி மற்றும் சர்க்கரைக் கட்டுமானம் மேலும் 2013–2014ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு ஆகிய விவரங்கள் பின்வருமாறு.

| அரவைப் பருவம் (அக் – செப்) | கரும்புச் சாகுபடிப் பரப்பு (இலட்சம்/ எக்டர்) | கரும்பு உற்பத்தி (இலட்சம் மெ.டன்) | உற்பத்தி திறன் (மெ.டன் / எக்டர்) | கரும்புப் பதிவுப் பரப்பு (இலட்சம்/ எக்டர்) | கரும்பு அரவை (இலட்சம் மெ.டன்) | சர்க்கரை உற்பத்தி (இலட்சம் மெ.டன்) | சராசரி சர்க்கரைக் கட்டு– மானம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| 2011–12 | 3.46 | 385.76 | 111 | 2.75 | 254.55 | 23.79 | 9.35 |
| 2012–13 | 3.93 | 396.82 | 100 | 2.81 | 214.57 | 19.06 | 8.88 |
| 2013–14 (மதிப்பீடு) | 3.27 | 317.60 | 97 | 2.18 | 142.22 | 12.80 | 9.00 |

ஆண்டுதோறும், மத்திய அரசு இந்திய அளவில் நியாயமான மற்றும் ஆதாய விலையை ஒவ்வொரு வருடமும் அறிவித்து வருகிறது. கரும்பு உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு மாநில அளவில் தமிழக அரசு, மாநில பரிந்துரை விலை நிர்ணயித்து அறிவித்து வருகிறது. இந்த கரும்பு விலையானது உற்பத்தி செலவு, இடுபொருட்களின் விலை, சர்க்கரை இருப்பு, சர்க்கரையின் சந்தை விற்பனை விலை மற்றும் இதர காரணிகளை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது. 2013–14 ஆம் ஆண்டு அரவைப் பருவத்திற்கு, 9.5 சதவிகித சர்க்கரைக் கட்டுமானம் கொண்ட கரும்புக்கு நியாயமான மற்றும் ஆதாய விலையாக டன் ஒன்றுக்கு ரூ.2,100/– எனவும், அதற்கு மேல் உள்ள ஒவ்வொரு 0.1 சதவிகித



கூடுதல் சர்க்கரைக் கட்டுமானத்திற்கு ஊக்கத் தொகையாக டன் ஒன்றுக்கு ரூ.22.10 எனவும், மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ளது. உரவிலை உயர்வு மற்றும் இதர இடுபொருட்களின் விலை உயர்வு இத்துடன் முக்கிய பயிர்காலங்களில் நிலவிடும் பண்ணைத் தொழிலாளர்கள் பற்றாக்குறை ஆகிய காரணங்களினால் அதிகரித்து வரும் சாகுபடி செலவினை கருத்தில் கொண்டு, 2013–14 அரவை பருவத்திற்கு ஒரு டன் கரும்பிற்கு ரூ.100/– வீதம் போக்குவரத்து கட்டணம் உள்ளடக்கிய மாநில பரிந்துரை விலையாக ரூ.2,650/– என அறிவித்துள்ளது.

கரும்பு உற்பத்தியை பெருக்கவும் மற்றும் சர்க்கரை ஆலைகள் நூறு சதவிகித அரவைத் திறனை அடையும் நோக்குடனும், நீடித்த நவீன கரும்பு உற்பத்தி திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் நிழல்வலைக் கூடத்தில் ஒரு பரு நாற்றுகள் உற்பத்தி செய்தல், பாசன நீர் மற்றும் இரசாயன உரங்களை அளவாகப் பயன்படுத்துதல், நுண்ணீர் வழி உரமிடுதல் ஆகிய தொழில்நுட்பங்கள் உற்பத்தி திறனை அதிகரிக்க கடைபிடிக்கப்படுகிறது. 2013–14 ஆம் ஆண்டில் நீடித்த நவீன கரும்பு சாகுபடி திட்டத்தின் கீழ் 20,000 எக்டர் பரப்பளவிற்கு திட்டமிட்டதில் 7,000 எக்டர் பரப்பளவில் மானிய உதவியுடனும், 13,000 எக்டர் பரப்பளவில் மானிய உதவி இல்லாமலும் செயல்படுத்த திட்டமிடப்பட்டது. மேலும் மானிய உதவியுடன் 400 நிழல் வலைக் கூடங்கள் நிறுவிட திட்டமிடப்பட்டது. குறைந்த மழை பொழிவு மற்றும் நிலத்தடி நீர்மட்டம் குறைதல் ஆகிய காரணங்களினால் 4,299 எக்டர் பரப்பளவில் மானிய உதவியுடனும், 1,337 எக்டர் பரப்பளவில் மானிய உதவி இல்லாமலும் நீடித்த நவீன கரும்பு சாகுபடி திட்டம் செயல்படுத்தப்பட்டது. மேலும், 393 நிழல்வலைக் கூடங்கள் மானிய உதவியுடன் நிறுவப்பட்டுள்ளது.

2014–2015 ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையின்படி 5,000 எக்டர் பரப்பளவில் நீடித்த நவீன கரும்பு சாகுபடி திட்டம் செயல்படுத்த திட்டமிடப்பட்டு, கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் மூலமாக 2,000 எக்டரில் சர்க்கரைத் துறையின் மேற்பார்வையிலும் மற்றும் 3,000 எக்டரில் தனியார் சர்க்கரை



ஆலைகளில் வேளாண்மைத்துறையின் கீழ் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்திற்கு தேவைப்படும் முக்கிய இடுபொருட்களை சர்க்கரை ஆலைகளுக்கு முன்னதாக வழங்கிட வேளாண்மைத் துறையில் திட்டமிடப்பட்டுள்ளது.

மண்ணின் வளத்தை மேம்படுத்தவும், மண்ணில் உள்ள நுண்ணுயிர்களை ஊக்குவிக்கவும் அங்ககப் பண்ணை முறைகளான பசுந்தாள் உர பயிர் சாகுபடி, நுண்ணுயிர் உரம் உபயோகித்தல், மற்றும் ஒருங்கிணைந்த உர நிர்வாகம் ஆகியவை கரும்பு சாகுபடியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் சர்க்கரை ஆலைகளிலிருந்து பெறப்படும் ஆலைக்கழிவு மண், மதிப்பு கூட்டப்பட்ட மண்புழு கழிவு உரமாகத் தயாரிக்கப்பட்டு கரும்பு உற்பத்தி திறனை அதிகரிக்க விவசாயிகளுக்கு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. கிராம அளவில் மண்ணின் வளத்தை மேம்படுத்தவும், கரும்பின் உற்பத்தி திறனை பெருக்கவும், விவசாயிகள் மண்புழு உரம், உயிர் உரம் மற்றும் அங்கக உரங்களை உற்பத்தி செய்ய ஊக்குவிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கிராம அளவில் நீடித்த நவீன கரும்பு உற்பத்தி திட்டத்தினை ஊக்குவிக்க அங்கக பண்ணையம் மற்றும் ஒருங்கிணைந்த உர நிர்வாகம் பற்றிய முனைப்பு இயக்கங்கள் நடத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கரும்பு உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்தும் நோக்கோடு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் மற்றும் கரும்பு ஆராய்ச்சி நிலையங்களுடன் சர்க்கரை ஆலைகள் இணைந்து அறிமுகப்படுத்தப்பட்ட அதிக விளைச்சல், வறட்சி மற்றும் பூச்சி எதிர்ப்புத் திறனுடைய கோ.க. 24, கோ.99004, கோ.99006, கோ.94012, கோ.சி.7 ஆகிய கரும்பு இரகங்கள் பயிரிடப்படுகின்றன. கரும்பு சாகுபடியில் கோ 86032, கோ.க.22, கோ.வி.94102 ஆகிய முக்கிய ரகங்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகின்றன.

கரும்பு மேல்வரி நிதியினை உபயோகித்து கரும்பு வயலிலிருந்து பிரதான சாலைகளுக்கு இணைப்பு சாலைகள் அமைக்கப்பட்டுள்ளதால், வெட்டிய கரும்பு உடனடியாக வயல்களிலிருந்து ஆலைகளுக்கு கொண்டு செல்லப்படுவதால் கரும்பு விவசாயிகளும் சர்க்கரை ஆலைகளும் பயனடைவதுடன், அதிக சர்க்கரை கட்டுமானம் பெற உதவியாக உள்ளது.



## 4. தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை (டான்ஹோடா)

தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையானது (டான்ஹோடா) தமிழ்நாடு கூட்டுறவு பதிவாளர் சட்டம் 1975ன் கீழ் பதிவு செய்யப்பட்டு, மத்திய அரசு மற்றும் மாநில அரசின் கீழ் செயல்படுத்தப்படும் பல்வேறு வகையான தோட்டக்கலை சார்ந்த திட்டங்களை செயல்படுத்தும் ஒரு சிறப்பு நோக்க அமைப்பாக 2004 முதல் செயல்பட்டு வருகிறது.

**டான்ஹோடா மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் :**

**1. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி இயக்கம்**

அ) தேசிய தோட்டக்கலை இயக்கம்

ஆ) தேசிய மூங்கில் இயக்கம்

**2. நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம்**

அ) பண்ணைக்குள்ளான நீர் நிர்வாக திட்டத்தின் கீழ் நுண்ணீர் பாசனதிட்டம்

ஆ) மானாவாரிப் பகுதி மேம்பாடு

**3. தேசிய மூலிகைப் பயிர் இயக்கம்**

**4. அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகள்**

**5. தமிழ்நாடு நீர்வள நில வளத்திட்டம்**

**1. மத்திய அரசு மற்றும் மாநில அரசு நிதிபகிர்வுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்:**

### 1.1.தேசிய தோட்டக்கலை இயக்கம்

தேசிய தோட்டக்கலை இயக்கமானது, தோட்டக்கலைத் துறையை முழுமையாக மேம்படுத்தும் நோக்குடன் குறிப்பாக அதிக இலாபம் தரக்கூடிய தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கம், விரிவாக்கத் தொழில் நுட்பங்களை ஊக்குவித்தல், அறுவடை பின் செய்நேர்த்தி மற்றும் வணிகத் திறனை மேம்படுத்த செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் பன்முனை நோக்குடன் தோட்டக்கலைப் பயிர்களின் மாற்றுப் பயிர் மூலம் சாகுபடிபரப்பு அதிகரிப்பினை இலக்காகக் கொண்டுள்ளது.



நம் மாநிலத்தில் செயல்படுத்தப்படும் மத்திய அரசின் சிறப்புத் திட்டங்களில் தேசிய தோட்டக்கலை இயக்கம் மிகவும் முக்கியமானது. இத்திட்டம் 2005-06 ஆம் ஆண்டு முதல் இயக்க முறையில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் அரியலூர், கோயம்புத்தூர், கடலூர், தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, மதுரை, பெரம்பலூர், புதுக்கோட்டை, திருப்பூர், இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், நீலகிரி, தேனி, திருநெல்வேலி, திருச்சி வேலூர், விழுப்புரம் ஆகிய 22 மாவட்டங்களில் மத்திய மாநில அரசு நிதி பகிர்வு முறையான 85:15 விகித அளவில் செயல்படுத்தப்படுகிறது. பன்னிரண்டாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் 2014–15 ஆம் ஆண்டு முதல் 'ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சி இயக்கத்தின்' கீழ் செயல்படுத்தப்படவுள்ளது.

திட்டம் சார்ந்த செயல்பாடுகளாக, உயர் மதிப்பு தோட்டக்கலைப்பயிர்கள் மற்றும் வீரிய ஒட்டுரக காய்கறிகளின் பரப்பு விரிவாக்கம், நடவுப்பொருட்கள் உற்பத்தி, பழைய தோட்டங்களைப் புதுப்பித்தல், நீர் ஆதாரம் உருவாக்குதல், பசுமைக்குடில் சாகுபடி, ஒருங்கிணைந்த உரமேலாண்மை மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை, இயற்கைப்பண்ணையம், இயந்திரமயமாக்கல், அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை, விற்பனை உட்கட்டமைப்பு, மனிதவள மேம்பாடு, தோட்டக்கலை மகத்துவ மையம், விவசாய உற்பத்தியாளர்கள் சங்கம், விவசாய ஆர்வலர் குழு / உற்பத்தியாளர்கள் சங்கம் ஊக்குவிப்பு ஆகியன மேற்கொள்ளப்படுகின்றன.

தோட்டக்கலை விளைபொருட்கள் விரைவில் அழுகக்கூடியவையாக இருப்பதால், திட்ட முறை செயல்பாடுகளுக்கு தற்போது முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. அறுவடை பின்செய் நேர்த்தி மூலம் அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்புகள் குறைவதற்கும், விவசாயிகள் உற்பத்தி சங்கங்கள் அமைத்து அவற்றை சந்தை ஒருங்கிணைப்பாளர் மற்றும் நிதி நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட சிறப்பான உதவிகளும், விவசாயிகள் இலாபம் அடைவதையும் இவ்வியக்கம் உறுதிப்படுத்துகிறது.



### 1.1.1.முக்கிய பயிர்களின் பரப்பு விரிவாக்கம்

தோட்டக்கலைப் பயிர்களான பழங்கள், காய்கறிகள், மலர்கள், சுவைதாளிதப் பயிர்கள், நறுமணப் பயிர்கள் மற்றும் மலைப்பயிர்களை இலக்காகக் கொண்டு புதிய தோட்டங்கள் உருவாக்கப்பட்டன. கடந்த மூன்று ஆண்டுகளில் (2011– 12 முதல் 2013– 14) 58,576 எக்டர் பரப்பளவில் பரப்பு விரிவாக்கம் ரூ.8,926.933 இலட்சம் செலவினத்தில் மேற்கொள்ளப்பட்டது. 2014–15 ஆம் ஆண்டு 13,031 எக்டர் பரப்பளவில் பரப்பு விரிவாக்கம் ரூ.2,093.30 இலட்சம் நிதியில் மேற்கொள்ளப்படவுள்ளது.

### 1.1.2.தரமான நடவு பொருட்கள்

கடந்த மூன்று ஆண்டுகளில் (2011– 12 முதல் 13– 14) ரூ.259.50 இலட்சம் நிதி தரமான நடவுப் பொருட்கள் உற்பத்தி செய்திட வழங்கப்பட்டது. 2014–15 ஆம் ஆண்டில் மாதிரி நாற்றங்கால், சிறிய நாற்றங்கால், திசு வளர்ப்பு மையம், காய்கறி விதைகள் உற்பத்தி ஆகியவற்றை அரசு மற்றும் தனியார் மூலம் செயல்படுத்தித் தரமான விதைகளும், தரமான நடவுப் பொருட்களும் உற்பத்தி செய்திட ரூ.1,243.55 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

### 1.1.3.உற்பத்தித் திறன் அதிகரிப்பு

கடந்த மூன்று ஆண்டுகளில் (2011– 12 முதல் 13– 14) ரூ.8,323.765 இலட்சம் நிதியானது தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் அதன் மூலம் விவசாயிகள் அதிக வருமானம் பெறவும் ஒதுக்கப்பட்டது. 2014–15 ஆம் ஆண்டில் பசுமைக்குடில் சாகுபடி, பழைய தோட்டங்கள் புதுப்பித்தல், இயந்திரமயமாக்குதல், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து / பயிர் மேலாண்மை, தேனீ வளர்ப்பினை ஊக்குவித்தல், நீர் ஆதாரம் உருவாக்குதல் ஆகிய இனங்களுக்கு ரூ.3,740.75 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.